# ஸ்ரீ புரந்தரதாஸர்

*எம் எல் வசந்தகுமாரி*

பதின்மூன்றாம் நுற்றாண்டிலிருந்து பதினெட்டாம் நுற்றாண்டுவரை பிரக்யாதி பெற்றிருந்த தாசகூட ஸ்தலங்களில் வியாச ராயர், நரஹரிதீர்த்தர், ஸ்ரீபாதராயர், ஸ்ரீ வாதிரஜஸ்வாமி, ஸ்ரீ புரந்தரதாசர் முக்கிய மானவர்கள். இவர்களில் ஸ்ரீ புரந்தரதாசர் அவர்கள் நமக்கு லட்சிய சங்கீதத்துக்கு நிரம்ப அருளியிருக்கிறார். மகானுபாவரான ஸ்ரீ புரந்தரதாசர் அவர்கள் காட்டியிருக் கும் வழியை அனுசரித்தே பின்னால் வந்த வாக்கேயக்காரர்களான ஸ்ரீ தியாகப் பிரும்மம், ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள், ஸ்ரீ க்ஷேத்ரஞர் மற்றும் பல இசைப் பெரியோர்களும் லட்சிய சங்கீதத்திற்குத் தேவையானதை நமக்கு நிரம்ப கொடுத்திருக்கிறார்கள். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் தாயாருக்கு ஸ்ரீ புரந்தரதாசரின் கீர்த்தனைகள் ஏராளமாகப் பாடம் உண்டாம். அதைக் கேட்டுத்தான் ஸ்ரீ தியாகய்யர் அவர்களும் அதைப் பின் பற்றியே கீர்த்தனைகளை அருளியிருக்கிறார் என்று பெரியோர்கள் சொல்லு வார்கள். ஸ்ரீ புரந்தரதாசரின் கீர்த்தனங்களிலும் ஸ்ரீ தியாகய்யரின் கீர்த்தனைகளிலும் கருத்துக் கள் ஒன்றாக இருப்பதைக் காணலாம். ஆக அந்தப்பந்தாவை அனுசரித்தே தான் நாமும் இன்றுவரை பாடிக்கொண்டு வருகிறோம் என்பது தெளிவு.

நவகோடிகளுக்கு அதிபனாக இருந்து 'கருமிகளின் காவலனாக' வாழ்ந்த ஸ்ரீ புரந்தரதாசர் ஆண்டவனின் லீலையால் மமதை ஒழிந்த வரலாறு எல்லோருக்கும் தெரிந்ததொன்று. அவ்வாறு மனம் மாறிய பின் விருப்பு வெறுப்பு இன்றித்தன் சொத்துக்கள் அனைத்தையம் தியாகம் செய்து தன் மனைவியுடன் அப்போது விஜயநகரத்தில் இருந்து வந்த மகான் ஸ்ரீ வியாசராயரிடம் தஞ்சம் புகுந்தார். குரு ஸ்ரீ வியாசராயரிடம் உபதேசத்தைக் கொண்டு அன்றுமுதல் விட்டலைப்பாடி மகிழ்ந்தார்.

மிஞ்சிய ஆயுட்காலம் முழுவதும் உஞ்ச விருத்தி செய்தே கழித்த அம்மகானுக்கு ஸ்ரீ புரந்தரதாஸ் என்னும் பெயர் ஸ்ரீ வியாச ராயரால் சூட்டப்பட்டது. ஸ்ரீ பாண்டு ரெங்கனைக்குறித்து பாடல்களைப் பாடிக் கொண்டு உலகத்தில் பக்தி பிரசாரம் செய்து அநேக பாடல்களை கன்னட மொழியில் இயற்றினார். அவருடைய ஞான மார்க்கத்திற்குக் காரணமாயிருந்த தன் மனைவியைப்பற்றியே 'ஆதத்தெல்லா ஒள்ளிதே ஆயித்து . . . . . நம்ம ஸ்ரீ தரன சேவகேசாதன சம்பத்தாயித்து' என்று முதல் பாட்டில் பாடியிருக்கிறார். நடந்த தெல்லாம் நன்மைக்கேதான். ஸ்ரீ பாண்டு ரெங்கனின் கிருபை கிடைத்தது. கோடீஸ் வரன் என்று கர்வப்பட்டேன் இப்போது அட்சயபாத்திரத்தை எடுத்துக் கொண்டேன். துளசி என்றால் அலட்சியம் செய்தேன். இப்போது துளசி மாலை அணிந்து அடிமை ஆனேன். அரசன் என்று நினைத்துக் கொண்டேன். ஓடு எடுத்துக் கொள்ளச் செய்த மனையாளின் குலம் சிறப்படையட் டும் என்பது இப்பாடலின் பொருளாகும்.

ஸ்ரீ புரந்தரதாசர் அவர்கள் 4,75,000 பாடல்கள் இயற்றியதாக அவருடைய சிஷ்யர் ஸ்ரீ விஜயவிட்டலரின் புத்தகத்தி

லிருந்து தெரிய வருகிறது. இது தவிர
கர்னாடக இசைக்கு ஆரம்பபயிற்சிக்கு
ஸ்வராவளி, அலங்காரம், லட்சிய லட்சண
கீதங்கள், தாளமாலிகா என்று சொல்லப்
படும் ஸுளாதிகள் உகாபோகங்கள், மற்றும்
பலவிதமான சில்லரைப் பாடல்களையும்
செய்திருக்கிறார். கீர்த்தனம் என்னும்
முறையையும் அதில் பல்லவி அனுபல்லவி
சரணம் என்பதையும் முதன்முதலாக உண்டு
படுத்திய மார்க்கதரிசி ஸ்ரீ புரந்தரதாசர்
ஆகும். ஸ்ரீ புரந்தரதாசரின் சாகித்ய
மகிமைகளைச் சொல்லும்போது திரிவேணி
சங்கமம்போல் கர்நாடகம், மஹாராஷ்டிரம்,
இந்துஸ்தானி இம்மூன்று மொழிகளிலும்
உள்ள ஜீவரசங்கள் அழகாகக் காணப்
படுகின்றன. மார்க்க, தேசி என்ற இரண்டு
வழிகளையும் சேர்த்து ஒரு பாணியை
ஏற்படுத்தியவர் ஸ்ரீபுரந்தரர். அவருடைய

கீர்த்தனங்களில் வேதப்பரிமாணங்கள், கர்ப
யோகம், பக்தியோகம், ஞானயோகம் உட
நிஷத்தின் சுரங்கள், தர்மம், நீதி மனித
னுடைய வாழ்க்கைக்கு வேண்டிய பண்ட
களும் அபிநயத்துக்குத் தகுதி உள்ள அம்சங்
களும் நிறைந்து காணப்படுகின்றன. ஸ்ரீமத்
பாகவதத்தின் சுரங்களுடன் ஸ்ரீ கிருஷ்ண
னின் லீலைகளைப் பற்றியும் நிரம்ப பாடி
யிருக்கிறார். அதைப்போலவே திருப்பதி
ஸ்ரீனிவாசனைப் பற்றியும் நிறையப்பாடல்
கள் உண்டு. இதைப்போல காளஹஸ்தி,
காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், மதுரை, ராமேஸ்
வரம் வரை யாத்திரை செய்து அதேபோல
வடக்கில் யாத்திரை செய்து தரிசித்த
தெய்வங்களையெல்லாம் பாடி மகிழ்ந்திருக்
கிறார். தாசர் அவர்கள் வெகுகாலம் ஹம்பி
யில்தான் இருந்தார்.


R no 217
17.12.97

*With Best Compliments From*

# Kapil Agencies

72, Sembudoss Street
**Chennai - 600 001**
Tel : 522 5443, 522 7149, 522 6264 Fax : 522 4666

Dealers and Stockists of SAIL, Lloyd Steel, Jindal Steel and Salem Steel Plant
We Deal in M.S. Plates (also special qualities including B.Q. Plates and High-Tensile Plates) Angles, Channels, Joists and Tor Steel

**The Specialists in Sheets, Plates and Cut-to-Length Sizes**

## Kapil Metal Processing Industries Pvt. Ltd.

126, Manali Ponneri High Road
**Chennai - 600 077**
Tel : 594 1416, 594 1671 Off : 524 8490